[செல்வி ஜெ ஜெயலலிதா] [2012 ஏப்ரல் 9

தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) இந்த உயர்த்தப்பட்ட அகவிலைப்படி 1–1–2012 முதல் கணக்கிடப்பட்டு ரொக்கமாக வழங்கப்படும்.

இந்த அகவிலைப்படி உயர்வு, உள்ளாட்சி நிறுவனங்கள் மற்றும் அரசு மானியம் பெறும் கல்வி நிறுவனங்களில் பணிபுரியும் அலுவலர்கள், ஆசிரியர்கள், வருவாய்த் துறையில் பணிபுரியும் கிராம உதவியாளர்கள், அங்கன்வாடி மற்றும் சத்துணவு ஊழியர்கள், ஊராட்சி உதவியாளர்கள், எழுத்தர்கள் மற்றும் வழக்கமாக அகவிலைப்படி அளிக்கப்படும் அனைவருக்கும் பொருந்தும். (மேசையைத் தட்டும் ஒலி) இதனால் அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள், ஓய்வூதியம் மற்றும் குடும்ப ஓய்வூதியம் பெறுவோர் என சுமார் 18 இலட்சம் பேர் பயனடைவார்கள்.

இந்த அகவிலைப்படி உயர்வுமூலம் அரசுக்கு ஆண்டொன்றுக்கு 1,383.49 கோடி ரூபாய் செலவு ஏற்படும் என்பதைத் தெரிவித்துக்கொண்டு அமைகிறேன்.

முற்பகல் 11–20

3. அறிவிப்புகள்

(அ) சட்டமன்றப் பேரவை மண்டபத்திற்குள் கைபேசி கொண்டுவர அனுமதி மறுப்பு மற்றும் உறுப்பினர்களுக்குக் கைபேசி பாதுகாப்பு மற்றும் Smart Card வசதிகள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 87 (x)–ன்படி தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை மண்டபத்திற்குள் மாண்புமிகு அமைச்சர்கள், சட்டமன்றப் பேரவை உறுப்பினர்கள், பத்திரிகையாளர்கள், அனைத்து அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் ஆகியோர் தங்களின் கைபேசியினை எடுத்து வரக்கூடாது எனத் தெரிவிக்கப்படுகிறது.

மேலும், சட்டமன்ற உறுப்பினர்கள் தங்களின் கைபேசியைப் பத்திரமாக பேரவை மண்டபத்தின் வெளியிலே வைத்துவிட்டு பேரவையினுள் செல்வதற்கு வசதியாக புறாக் கூண்டு அறைகள் (Pigeon Holes) பூட்டு, சாவி, வசதிகளுடன் பேரவையின் மேல்புறம் மற்றும் கீழ்ப்புறத் தாழ்வாரங்களில் வைக்கப்பட்டுள்ளன. மேலும், சட்டமன்ற உறுப்பினர்களுக்கு இருக்கை ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள எண்களைக் கொண்ட அறைகள்

2012 ஏப்ரல் 9] [பேரவைத் தலைவர்]

ஒவ்வொரு உறுப்பினருக்கும் ஒதுக்கப்பட்டுள்ளன. தங்களது இருக்கை ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள எண் கொண்ட புறாக் கூண்டு அறை சாவியினை நூலகப் பிரிவு–2இலிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

மேலும், B.S.N.L. smart pay phones கருவிகள் பேரவை மண்டபத்தின் மேல்புற மற்றும் கீழ்ப்புறத் தாழ்வாரங்கள், பப்ளிக் பிளாசா, சட்டமன்றப் பேரவை ஆண்கள் மற்றும் பெண்கள் உறுப்பினர்களின் ஓய்வறைகள், தி.மு.க. சட்டமன்றக் கட்சி அறை, கம்யூனிஸ்டு சட்டமன்றக் கட்சி அறையின் நுழைவாயில் மற்றும் பேரவை மண்டபத்தின் பத்திரிகையாளர்கள் மேல் மாடம் ஆகிய இடங்களில் வைக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு உறுப்பினருக்கும் ஒரு வருட காலம் செல்லத்தக்க வகையில் ரூ.100/– மதிப்பிலான smart card இலவசமாக இச்செயலகத்தால் வழங்கப்படும். அதில் ரூ.70/– வரை பேசிக்கொள்ளலாம். இவ்வசதியைத் தொடர்ந்து உபயோகப்படுத்த வேண்டுமாயின், உறுப்பினர்கள் தங்கள் சொந்த செலவில் ரீசார்ஜ் செய்துகொள்ள வேண்டும். ரீசார்ஜ் செய்துகொள்ள வசதியாக BSNL பணியாளர்கள் நூலகப் பிரிவு–2–ல் இருப்பார்கள். அவர்களிடம் தங்களது smart card அட்டைகளை ரீசார்ஜ் செய்துகொள்ளலாம்.

4. அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள் மற்றும் ஓய்வூதியதாரர்களுக்கு அகவிலைப்படி உயர்வு குறித்த முதலமைச்சரின் அறிவிப்புக்கு நன்றி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் முனைவர் செ.கு. தமிழரசன் அவர்கள்.

முனைவர் செ.கு. தமிழரசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு இயந்திரத்தின் அச்சாணியாக விளங்கக்கூடிய அரசு ஊழியர்களுக்கும், நாளைய தலைமுறையை உருவாக்குவதிலே பெரும்பங்காற்றுகிற ஆசிரியர் பெருமக்களுக்கும், இந்தக் கோடையிலும் கருணை மழை பொழிந்திருக்கிற புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு (மேசையைத் தட்டும் ஒலி) எங்களுடைய நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறோம். ஆசிரியர்கள் என்றால் குற்றம் நீக்குபவர்கள் என்று ஒரு பொருள் உண்டு. குற்றம் நீக்குபவர்களுடைய குறையை நீக்கியிருக்கிற மனிதருள் மாமாணிக்கமாக விளங்குகிற புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு (மேசையைத் தட்டும் ஒலி) ஆசிரியப் பெருமக்கள்